பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

22 09 2025 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1) பிரதமர் திரு நரேந்திர மோடியின் உரைகள் அடங்கிய புத்தக தொகுப்பை குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

2) சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பெரும்பாலான மக்களுக்கு பயனளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3) பொருளாதாரம், தொழில்நுட்பம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாடு வளர்ச்சியடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4) நாடு முழுவதும் ஒன்பது நாள் கொண்டாடப்படும் நவராத்திரி பண்டிகை இன்று கோலாகலத்துடன் தொடங்கியது.

5) இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி நான்கு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>

உலகம் முழுவதும் ஒரே குடும்பம் எனும் கருத்தை இந்தியா உலகிற்கு எடுத்துக்காட்டியிருப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரதமரின் உரைகள் அடங்கிய புத்தகங்களை வெளியிட்டு பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாக கூறினார்.

ஒற்றுமையின் மூலமே வலுவான தேசத்தை உருவாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மக்களுக்கு சேவை செய்யவே பிரதமர் அரசியலை பயன்படுத்தி வருவதாக கூறினார்.

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், உலகிலேயே மிகப்பெரிய உணவு பாதுகாப்புத் திட்டம் மூலம் 80 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*54 கோடி ஜன்தன் வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டதாக கூறிய அவர், நாடு முழுவதும் 13 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறினார்.*

*இதில், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு Sanjay Jaju உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

*<<<<<<>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பெரும்பாலான மக்களுக்கு பயனளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*அருணாச்சலப்பிரதேசத்தில் ஐந்தாயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் இன்று தொடங்கிவைத்து பேசினார்.*

*வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி தமது அரசுக்கு முக்கியமானது என்று பிரதமர் குறிப்பிட்டார்.*

*முந்தைய அரசுகள் வடகிழக்கு மாநிலங்களை புறக்கணித்தன என்றும், அதன் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைவாக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*11 வருடங்களுக்கு முன்பு வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது தமது அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*அருணாச்சலப்பிரதேசத்தின் பாரம்பரிய உடையில் தோன்றிய பிரதமர், அந்த மாநிலத்தின் பாரம்பரியத்தை தாம் மதிப்பதாகவும், அம்மாநிலத்தின் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் என்றும் கூறினார்.*

*இந்த நிகழ்ச்சியின்போது, Shiyomi மாவட்டத்தில் இரண்டு மின் திட்டங்களுக்கு அவர் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.*

*ஆயிரத்து 750 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள இந்த மின்திட்டம் மூலம் வருடத்திற்கு 80 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட உள்ளது.*

*<<<<<>>>>>*

*பொருளாதாரம், தொழில்நுட்பம், உற்பத்தி, டிஜிட்டல் புரட்சி, ராணுவ தளவாடங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா கடந்த பத்தாண்டுகளில் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*மொரோக்கோவிற்கு இரண்டுநாள் பயணமாக சென்றுள்ள திரு ராஜ்நாத் சிங், அந்நாட்டில் உள்ள இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார்.*

*இதுகுறித்து சமூக வலைளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியா உலக அளவில் மிக முக்கிய நாடாக உருவெடுத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*மொரோக்கோ பாதுகாப்பு அமைச்சர் திரு Abdeltif Loudiyi-வின் அழைப்பை ஏற்று, அங்கு சென்றுள்ள அமைச்சர், இருநாடுகளுக்கு இடையே பாதுகாப்பு மற்றும் தொழில்துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்து குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.*

*<<<<<>>>>>*

*ஐ நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.*

*இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தாம் நம்புவதாக திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.*

*வர்த்தகம், தொழில், முதலீடுகள் போன்றவற்றில் ஒத்துழைப்புகளை மேற்கொள்வது குறித்தும் ஆலோசிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*<<<<<<>>>>>*

*தொழில்துறைக்கு பல்வேறு சலுகைகள் அளித்து வர்த்தகத்தை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரியில் ஐந்து சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற இரண்டடுக்கு வரி செயல்படுத்தியுள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*வேளாண் பொருட்கள், வாகனங்கள், மின்சாதன பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*நாடு முழுவதும் ஒன்பது நாள் கொண்டாடப்படும் நவராத்திரி பண்டிகை இன்று கோலாகலத்துடன் தொடங்கியது.*

இதனையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இன்றைய தினம் சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழாவாகவும் இணைந்துள்ளதால், மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி கிடைத்திருப்பதாக பிரதமர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நவராத்திரி பண்டிகையின்போது மகிழ்ச்சியுடன், மன உறுதியும், புது நம்பிக்கையும் அனைவரின் வாழ்க்கையில் பிறக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி நான்கு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூர்யாவை சந்தித்து பேசவுள்ள அவர், இலங்கை முப்படை தலைமை தளபதிகளுடன் இருநாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும், கடல்சார் பாதுகாப்பு குறித்தும் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச கடல்சார் மாநாட்டிலும் அவர் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அரசுமுறைப்பயணமாக சிங்கப்பூர் வழியாக தென்கொரியா புறப்பட்டார்.

*முன்னதாக, சிங்கப்பூரில் அமைந்துள்ள பழமைவாய்ந்த அருள்மிகு ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் வழிபாடு செய்தார்.*

*இந்திய தூதரக அதிகாரிகள் இதில் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*<<<<<<>>>>>*

*நவராத்திரி பண்டிகையுடன் சரக்கு மற்றும் சேவை வரியும் குறைந்திருப்பதால், நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் களை கட்டியுள்ளன.*

*அனைத்துத் தரப்பு மக்களையும் கருத்தில்கொண்டு, 300-க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.*

*மத்திய அரசின் இந்த அறிவிப்பு மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இந்த வரி குறைப்பு தங்களுக்கு பெருமளவு பயனுள்ளதாக அமைந்திருப்பதாக தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.*

*<<<<<<>>>>>*

*அமெரிக்காவின் உள்நாட்டு மென்பொருள் பயிற்சிக்காக NASSCOM அமைப்பு ஒரு பில்லியன் டாலர் அளவிற்கு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.*

*புதுதில்லியில் நாஸ்காம் இன்று வெளிட்டுள்ள செய்திக்குறிப்பில், அமெரிக்காவில் செயல்படும் இந்திய நிறுவனங்கள், H-1B Visa பெற்ற வெளிநாட்டு பணியாளர்களுக்கு பதிலாக உள்நாட்டு பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதாக கூறியுள்ளது.*

*அமெரிக்காவில் உள்ள இந்திய நிறுவனங்களில் மொத்த பணியாளர்களில் H-1B Visa பெற்ற பணியாளர்கள் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக இருப்பதாக நாஸ்காம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*<<<<<<>>>>>*

*நேபாள பிரதமர் சுஷிலா Karki ஐந்து புதிய அமைச்சர்களை அறிவித்துள்ளார்.*

*திரு அனில்குமார் சின்ஹா, தொழில் மற்றும் சட்டத்துறை அமைச்சராகவும், திரு மஹாபீர் கல்வி அமைச்சராகவும், திரு மதன் பிரசாத் வேளாண்துறை அமைச்சராகவும், திரு ஜெக்தீஷ் தகவல் தொடர்புத்துறை அமைச்சராகவும், திருமதி சங்கீதா சுகாதாரத்துறை அமைச்சராகவும் பதவியேற்க உள்ளனர்.*

*<<<<<<>>>>>*

*அஸ்ஸாம் மாநிலம் போதோலேண்டு பகுதியை சேர்ந்த Kokrajhar, Baksa, Chirang, Udalguri மற்றும் Tamulpur மாவட்டங்களை சேர்ந்த 40 கவுன்சில் உறுப்பினர்களுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.*

*மூவாயிரத்து 359 வாக்குப்பதிவு மையங்களில் காலை ஏழரை மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை நான்கு மணிவரை நடைபெறும்.*

*இந்த தேர்தலில் 316 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*இதில் பதிவாகும் வாக்குகள் வரும் 26-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.*

*<<<<<<>>>>>*